550

# கடவுளர் போற்றும் தெய்வம்

—கண்ணகி

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 30

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

உரிமைப்பதிப்பு

விலை ரூ. 1/-

விற்பனை உரிமை :
**பாரி நிலையம்,**
பிராட்வே, சென்னை - 1

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைவர்
பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள்

# அணிந்துரை

பழந் தமிழ்நாட்டிலே மாதவர் நோன்பும் மடவார் கற்பும் புலவர் பாடும் புகழ் உடையனவாய் அமைந்தன. கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றால் தமிழ் நாட்டுக் கற்பு நெறி என்று மில்லாத தோர் ஏற்றம் பெற்றது. சோழ நாட்டுத் தலைநகரத்திலே பிறந்து, பாண்டி நாட்டுத் தலைநகரத்திலே கற்பின் அளப்பரிய ஆற்றலைக் காட்டி, சேர நாட்டுத் தலைநகரத்திலே கோயில் கொண்டருளிய கண்ணகியை வீரமா பத்தினி என்றும், மங்கலா தேவி என்றும் இந் நாட்டு மக்கள் போற்றி வருகின்றனர். தமிழகத்திலே தோன்றிய கண்ணகி வழிபாடு அயல்நாடுகளிலும் பரவிற்று. கடல் சூழ்ந்த ஈழ நாட்டில் கயவாகு மன்னன் அவ்வழிபாட்டைத் தொடங்கினான் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். அன்று முதல் இன்றளவும் இலங்கையில் கண்ணகித் தெய்வம் அருள் புரிகின்றது. மலை நாட்டிலே மலையாள பகவதி என்று போற்றப்படும் தெய்வம் கண்ணகியே என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இன்னும் மங்கலந்தரும் மாண்புடைய கண்ணகியின் பெயரால் அமைந்த ஊரே 'மங்களூர்' என வழங்குகின்றதென்பர்.

இன்னோரன்ன சிறப்பு வாய்ந்த கண்ணகியின் வாலாறு செந் தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் விரித்துரைக்கப் படுகின்றது. அவ்வரலாற்றின் வாயிலாக மூன்று சிறந்த உண்மைகளை இளங்கோவடிகள் எடுத்துரைத்தார். நீதி தவறிய அரசு நிலை குலைந்து அழியும் என்பதும், கற்பின் செல்வியைக் கடவுளரும்

போற்றுவர் என்பதும், வினையின் பயனை என்ஞான்றும் விலக்க ஒண்ணாது என்பதும் சிலப்பதிகாரக் காவியத்திலே செம்மையாக உணர்த்தப்படுகின்றன.

இத்தகைய உயரிய கதை சில காலத்துக்கு முன்னர்வரை இந் நாட்டிலே சீரழிந்து நாடகமேடையில் நிலவி வந்தது. கோவலனைக் காமுகனாக்கி, மாதவியை வேசியாக்கி, கண்ணகியைக் காளியாக்கி, சிலப்பதிகாரக் கதையைப் பாழாக்கினர் நாடக மாக்கள். இக் காலத்தில் அவ் விழிதகைமை நீங்கி வருகின்றது. தமிழ் மக்கள் சிலப்பதிகாரத்தைச் சீராட்டத் தொடங்கி விட்டனர். அந்த வகையில் தமிழ் நாட்டார்க்குச் சிறந்த தொண்டு செய்து வருகின்றார் அன்பர் திரு. அ. மு. பரமசிவானந்தனார். பல்லாண்டுகளாக அவருடைய செந்தமிழ் புலமையையும், ஆராய்ச்சித் திறனையும், சொல் வன்மையையும் நான் நன்கு அறிவேன். சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் மொழியைப் பேணி வளர்க்கும் பேராசிரியராகிய அந் நண்பர் 'கடவுளர் போற்றும் தெய்வம்' என்னும் பெயரால் கண்ணகியின் வரலாற்றை இனிய, எளிய உரை நடை நூலாக ஆக்கி அளித்திருக்கின்றார். சிலப்பதிகாரத்திலுள்ள நெஞ்சையள்ளும் அடிகள் ஆங்காங்கு உரை நடையின் இடையிடையே அமைந்து அழகு செய்கின்றன. கற்றார்க்கும் மற்றார்க்கும் இந்நூல் நல்ல தமிழ் விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. கண்ணகியின் மரபில் வந்த தமிழ் நாட்டுப் பெண்மக்கள் சிறப்பாக இந்நூலைக் கற்று, தமிழ் நாட்டு அற நெறியைப் பாதுகாத்தல் வேண்டும் என்பது என் ஆசை. எழுத்தாலும் சொல்லாலும் செந்தமிழ்ப் பணி செய்து வரும் இந் நூலாசிரியருக்குத் தமிழகத்தார் நன்றி என்றும் உரியதாகுக.

சென்னைப் பல்கலைக் கழகம்,
11—5—51

ரா. பி. சேதுப் பிள்ளை